**செய்தி வெளியீடு எண்:341** **நாள்: 25.06.2013**

<u>செய்தி வெளியீடு</u>

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் இன்று (25.6.2013) தலைமைச் செயலகத்தில், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை சார்பில் கடலூரில் 1 கோடியே 44 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள ஊராட்சி ஒன்றிய அலுவலகக் கட்டடத்தை காணொலி காட்சி (Video Conferencing) மூலமாக திறந்து வைத்தார்கள். மேலும், 132 கோடியே 51 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள தொகுப்பு வீடுகள், புதிய கட்டடங்கள் மற்றும் பாலங்களையும் திறந்து வைத்தார்கள்.

ஊரக உள்ளாட்சி அமைப்புகள் தங்களது கடமைகளைத் திறம்பட நிறைவேற்றி, சுய ஆட்சி அமைப்புகளாக செயல்பட உதவும் வகையில் ஊராட்சிகளில் கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்திடவும், பழுதடைந்த ஊராட்சி ஒன்றிய மற்றும் ஊராட்சி அலுவலகக் கட்டடங்களுக்கு மாற்றாக புதிய கட்டடங்கள் கட்டுதல், ஏழை, எளிய மக்களுக்கான வீடுகள், பாதுகாக்கப்பட்ட குடிநீர், சுகாதார வசதிகள், அனைத்து காலங்களுக்கும் ஏற்ற சாலை வசதி உட்பட பல்வேறு உள்கட்டமைப்பு வசதிகளை உருவாக்கி ஊரகப் பகுதி மக்களின் வாழ்க்கைத் தரத்தினைத் மேம்படுத்திட மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் தலைமையிலான அரசு பல்வேறு திட்டங்களை சீரிய முறையில் தொடர்ந்து செயல்படுத்தி வருகிறது.

அதன்படி, ஊரகப் பகுதிகளில் வறுமைக் கோட்டிற்கு கீழ் வாழும் ஏழை, எளிய மக்கள் பயன் பெறும் வகையில் 101 கோடியே 52 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள 10,152 தொகுப்பு வீடுகள்;

கடலூரில் 1 கோடியே 44 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள புதிய ஊராட்சி ஒன்றிய அலுவலகக் கட்டடம் ஆகியவற்றை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் இன்று திறந்து வைத்தார்கள். மேலும், கோயம்புத்தூர் மாவட்டம் சூலூர், சேலம் மாவட்டம் பெத்தநாயக்கன் பாளையம், சிவகங்கை மாவட்டம் கல்லல், தூத்துக்குடி மாவட்டம் ஆழ்வார்திருநகரி மற்றும் வேலூர் மாவட்டம் நாட்றாம்பள்ளி ஆகிய ஐந்து இடங்களில் 7 கோடியே 29 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள ஊராட்சி ஒன்றிய அலுவலகக் கட்டடங்கள்;

கடலூர், தருமபுரி, ஈரோடு, காஞ்சிபுரம், கிருஷ்ணகிரி, நாகப்பட்டினம், நாமக்கல், புதுக்கோட்டை, சிவகங்கை, தஞ்சாவூர், திருநெல்வேலி, திருவண்ணாமலை, தூத்துக்குடி, திருப்பூர், திருவாரூர், வேலூர், விழுப்புரம் மற்றும் விருதுநகர் ஆகிய 18 மாவட்டங்களில்

8 கோடியே 48 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்ட 104 ஊராட்சி மன்ற அலுவலக கட்டடங்கள்;

அரியலூர், கோயம்புத்தூர், கடலூர், திண்டுக்கல், காஞ்சிபுரம், கிருஷ்ணகிரி, மதுரை, நாகப்பட்டினம், நாமக்கல், பெரம்பலூர், புதுக்கோட்டை, இராமநாதபுரம், சேலம், சிவகங்கை, தஞ்சாவூர், நீலகிரி, தேனி, திருநெல்வேலி, திருவண்ணாமலை, தூத்துக்குடி, திருப்பூர், திருவள்ளூர், திருவாரூர், வேலூர், விழுப்புரம் மற்றும் விருதுநகர் ஆகிய 26 மாவட்டங்களில் 10 கோடியே 71 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள புதிய பொது விநியோகக் கடைகள், சமையல் கூடங்கள், பள்ளிக் கட்டடங்கள், அங்கன்வாடி மையங்கள், மகளிர் சுய உதவிக் குழுக் கூடங்கள், மேல்நிலை நீர்தேக்கத் தொட்டிகள், சமுதாயக் கூடங்கள், கலையரங்கம் மற்றும் வட்டார புள்ளியியல் ஆய்வாளர் அலுவலகங்கள்;

கோயம்புத்தூர், ஈரோடு, மதுரை, நாகப்பட்டினம், நாமக்கல், புதுக்கோட்டை, சேலம், தஞ்சாவூர், தேனி, திருநெல்வேலி, திருவண்ணாமலை, தூத்துக்குடி மற்றும் திருவாரூர் ஆகிய 13 மாவட்டங்களில் 1 கோடியே 59 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள ஒருங்கிணைந்த ஆண்கள் சுகாதார வளாகங்கள்;

நாகப்பட்டினம் மாவட்டம் கட்டுமாவடி, கொத்தமங்களம் மற்றும் எரவஞ்சேரி ஆகிய மூன்று இடங்களில் 2 கோடியே 92 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள புதிய பாலங்கள்

என மொத்தம், 133 கோடியே 95 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள தொகுப்பு வீடுகள், ஊராட்சி ஒன்றிய அலுவலகக் கட்டடங்கள், ஊராட்சி அலுவலகக் கட்டடங்கள், சமுதாயக் கூடங்கள், கலையரங்கம், பொது விநியோகக் கடைகள், பள்ளிக் கட்டடங்கள், அங்கன்வாடி மையங்கள், சமையல் கூடங்கள், மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் உட்பட பல்வேறு கட்டடங்கள் மற்றும் பாலங்களை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் இன்று திறந்து வைத்தார்கள்.

இந்த நிகழ்ச்சியில், மாண்புமிகு நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர், தலைமைச் செயலாளர், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை முதன்மைச் செயலாளர், ஊரக வளர்ச்சி மற்றும் பஞ்சாயத்து ராஜ் ஆணையர் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

*******

வெளியீடு : இயக்குநர், செய்தி-மக்கள் தொடர்புத்துறை, சென்னை-9
நாள் : 25.6.2013